முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA3 பரீட்சை – 2018 யூலை

## (AA31) நிதிக் கணக்கீடும் அறிக்கையிடலும்

(Financial Accounting and Reporting)

2018-07-21
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 10
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தரவும்.***

(3) ***விடைகள்*** *உமக்குத் தரப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றை தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்கள்* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***செயல் வினைச் சொற்களின்*** *நிரலில் தரப்பட்ட வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

அடிப்படைத் தரரீதியான குணாம்சங்களுக்கு மேலதிகமாக, தொடர்புடையதும் விசுவாசமாக முன்னிலைப்படுத்தப்படுவதுமான தகவல்களின் பிரயோசனத்தினை அதிகரிக்கின்ற வேறு தரரீதியான குணாம்சங்களும் உள்ளன. ஒரு தோற்றப்பாடு தொடர்பில் இரண்டு வழிகள் சம அளவில் தொடர்புடையதாகவும் விசுவாசமாக முன்னிலைப்படுத்தப்படுவதுமாகக் கருதப்படும்போது, அதிகரிக்கும் தரரீதியான குணாம்சங்கள் எந்த வழியைப் பயன்படுத்த வேண்டுமென்பதைத் தீர்மானிப்பதில் உதவக்கூடும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

தகவல்களின் பிரயோசனத்தை அதிகரிக்கச் செய்யும் ஏதாவது இரண்டு (02) தரரீதியான குணாம்சங்களை (qualitative characteristics) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

### வினா 02

ஒருங்கிணைந்த அறிக்கை (integrated report) ஒன்றின் முதன்மை நோக்கம் நிதி மூலதனத்தினை வழங்குவோருக்கு நிறுவனம் காலப்போக்கில் எவ்வாறு பெறுமதியினை அதிகரிக்கச் செய்கின்றது என்பதனை விபரிப்பதாகும். ஒருங்கிணைந்த அறிக்கையொன்று எட்டுப் பிரதான கூறுகளை உள்ளடக்குகிறது. வியாபார மாதிரி (business model) மற்றும் நிறுவன மேலோட்டமும் வெளிவாரிச் சூழலும் (organizational overview and external environment) ஆகியன ஒருங்கிணைந்த அறிக்கையில் உள்ளடக்கப்படும் இரண்டு பிரதான கூறுகள் ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

ஒருங்கிணைந்த அறிக்கையில் வியாபார மாதிரியின் இரண்டு (02) பிரதான விடயங்களையும் (key areas) நிறுவன மேலோட்டம் மற்றும் வெளிவாரிச் சூழலின் மூன்று (03) பிரதான விடயங்களையும் **குறிப்பிடுக.**
(05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட ஒஷீட்டா டிரான்ஸ்போட் சேர்விசஸ் கம்பனியானது** ரூ. 6.5 மில்லியன் பெறுமதியான பாரவூர்தி வாகனமொன்றினைக் கொள்வனவு செய்தது. 2017 ஏப்ரல் 01 ஆந் திகதி உடனடிக் கொடுப்பனவாக ரூ. 1.5 மில்லியன் செலுத்தப்பட்டதுடன் எஞ்சிய தொகைக்காக (அதாவது ரூ. 5 மில்லியன்) அதே தினத்தில் **வரையறுக்கப்பட்ட AB வங்கியுடன்** நிதிக் குத்தகை உடன்படிக்கை ஒன்றினை ஏற்படுத்தியிருந்தது. குத்தகை உடன்படிக்கையின் கட்டுறுப்புக்கள் கீழ்வருமாறு :

| | |
|---|---|
| வருடாந்தக் குத்தகைத் தவணைக் கட்டணம் | ரூ. 1,473,959/- |
| குத்தகைக் காலம் | 5 ஆண்டுகள் |
| வட்டி வீதம் | ஆண்டுக்கு 14.5 % |
| குத்தகைத் தவணைக் கட்டணம் செலுத்த வேண்டிய திகதி | ஒவ்வொரு ஆண்டிலும் மார்ச் 31 ஆந் திகதியில் |

இந்த வாகனத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகள். கம்பனி நேர்கோட்டு முறையில் இந்த வாகனத்தைத் தேய்மானம் செய்கிறது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

மேலுள்ளவை தொடர்பில் 2018 மார்ச் 31 ஆந் திகதியில் நிதி நிலைக் கூற்று மற்றும் 2018 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று ஆகியவற்றின் பிரித்தெடுப்புகளைத் (extracts) **தயாரிக்குக.**

*(குத்தகைத் தவணைக் கட்டணங்கள் உரிய திகதிகளில் செலுத்தப்படுவதாகக் கொள்க.)* (05 புள்ளிகள்)

## வினா 04

கீழ்வரும் தகவல்கள் **வரையறுக்கப்பட்ட ஜாஸ் கம்பனியின்** ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன :

(1) 2018 பெப்ரவரி 01 ஆந் திகதி **வரையறுக்கப்பட்ட ஜாஸ் கம்பனி** ஒவ்வொன்றும் ரூ. 10 விலையில் 100,000 சாதாரண பங்குகளை வழங்கியது. இந்த மொத்த விலையில் பங்கொன்றிற்கு ரூ. 6/- ஆனது 2018 மார்ச் 20 ஆந் திகதிக்கு முன்னர் விண்ணப்பத்துடனும் மிகுதி ரூ. 4/- (பங்கொன்றிற்கு) ஆனது 2018 ஏப்ரல் 10 ஆந் திகதி ஒதுக்கத்தின்போதும் செலுத்தப்பட வேண்டும். கம்பனி 120,000 பங்குகளுக்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொண்டதுடன் மேலதிகமாகப் பெற்ற விண்ணப்பங்களை 2018 மார்ச் 30 ஆந் திகதி நிராகரித்ததுடன் பெற்ற பணத்தையும் திருப்பிச் செலுத்தியது.

(2) கம்பனி 2018 சனவரி 01 ஆந் திகதி வ/வு **ABC வங்கியிடமிருந்து** ரூ. 5 மில்லியனை வங்கிக் கடனாகப் பெற்றது. கடன் உடன்படிக்கையின்படி கடனுக்கான மீள் கொடுப்பனவுகள் 2018 சனவரி 31 இலிருந்து ஆரம்பித்ததுடன் செலுத்திய தவணைக் கட்டணங்களின் பகுப்பு கீழ்வருமாறு :

| | **செலுத்திய மொத்தத் தவணைக் கட்டணம் (ரூ.)** | **வட்டிப் பகுதி (ரூ.)** |
|---|---|---|
| 2018.01.31 | 77,955 | 68,700 |
| 2018.02.28 | 77,955 | 64,200 |
| 2018.03.31 | 77,955 | 61,380 |
| **மொத்தம்** | **233,865** | **194,280** |

(3) 2018 மார்ச் 31 இல் கம்பனி ரூ.750,000/-க்கான வங்கி மேலதிகப்பற்று வசதியினைப் பெற்றிருந்தது.

(4) 2018 மார்ச் 31 ஆந் திகதி கம்பனி அதன் தாபக ஊழியர் ஒருவருக்கு ரூ. 1,000,000/- இனை நீண்ட காலக் கடனாக வழங்கியது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியீட்ட (financing) நடவடிக்கைகளிலிருந்து பிறப்பிக்கப் பட்ட நிகர காசுப் பாய்வினைத் (Net cash flows) **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# <u>பகுதி B</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட மல்டி கெமி எக்ஸ்போட்ஸ் (தனி) கம்பனியின்** 2018 மார்ச் 31, 2017 மார்ச் 31 மற்றும் 2016 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான முற்றடக்க வருமானக் கூற்றுக்களினதும் 2018 மார்ச் 31, 2017 மார்ச் 31 மற்றும் 2016 மார்ச் 31 ஆகிய திகதிகளில் நிதிநிலைக் கூற்றுக்களினதும் பிரித்தெடுப்புகள் கீழே தரப்பட்டுள்ளன :

**முற்றடக்க வருமானக் கூற்றுக்களின் பிரித்தெடுப்புகள்** *(ரூ.'000)*

| ஆண்டு முடிவு | 2018 மார்ச் 31 | 2017 மார்ச் 31 | 2016 மார்ச் 31 |
|---|---|---|---|
| விற்பனை | 127,500 | 105,000 | 133,000 |
| விற்பனைக் கிரயம் | 88,500 | 71,200 | 93,100 |
| மொத்த இலாபம் | 39,000 | 33,800 | 39,900 |
| வருமான வரி | 2,240 | 1,070 | 1,980 |
| வரிக்குப் பின் இலாபம் | 8,020 | 8,130 | 12,020 |

**நிதிநிலைக் கூற்றுக்களின் பிரித்தெடுப்புக்கள்** *(ரூ.'000)*

| திகதியில்: | 2018 மார்ச் 31 | 2017 மார்ச் 31 | 2016 மார்ச் 31 |
|---|---|---|---|
| நடைமுறைச் சொத்துக்கள் | 20,470 | 26,260 | 38,000 |
| நடைமுறைப் பரிப்புக்கள் | 13,200 | 17,875 | 12,280 |
| வியாபார வருமதிகள் | 15,460 | 14,220 | 18,900 |
| வியாபார சென்மதிகள் | 6,400 | 6,100 | 8,440 |
| தொக்குகள் | 2,680 | 11,530 | 18,650 |
| பங்குதாரர் உரிமையாண்மை | 39,540 | 31,520 | 23,390 |

கடன் விற்பனையானது மொத்த விற்பனையில் 55% எனக் கொள்க. மேலும் கொள்வனவானது விற்பனைக் கிரயத்தின் 90 % ஆவதுடன் அதில் 70 % கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டவை ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

2018 மார்ச் 31 மற்றும் 2017 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான **வரையறுக்கப்பட்ட மல்டி கெமி எக்ஸ்போட்ஸ் (தனி) கம்பனியின்** செயற்பாட்டினைக் கீழ்வரும் வீதங்களைக் கருத்திற் கொண்டு **பகுப்பாய்வு செய்க** :

(a) மொத்த இலாப வீதம் (Gross Profit Ratio)

(b) நிகர இலாப வீதம் (Net Profit Ratio)

(c) விரைவுச் சொத்து வீதம் (Quick Assets Ratio)

(d) கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் (Debtors' Collection Period)

(e) கடன்கொடுத்தோர் தீர்ப்பனவுக் காலம் (Creditors' Settlement Period) (10 புள்ளிகள்)

## வினா 06

2018 மார்ச் 31 மற்றும் 2017 மார்ச் 31 ஆகிய திகதிகளில் **வரையறுக்கப்பட்ட செவன் றோசஸ் கம்பனியின்** நிதிநிலைக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன :

**வரையறுக்கப்பட்ட செவன் றோசஸ்**
**நிதிநிலைக் கூற்று** *(ரூ.'000)*

| | 2018 மார்ச் 31 இல் | | 2017 மார்ச் 31 இல் | |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (கிரயத்தில்) | 46,000 | | 56,000 | |
| கழி : திரள் தேய்மானம் | (24,000) | | (20,000) | |
| முன்கொணரற் பெறுமதி | | 22,000 | | 36,000 |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | | | |
| தொக்குகள் | 16,000 | | 5,800 | |
| வியாபார வருமதிகள் | 33,500 | | 29,400 | |
| காசும் காசுச் சமானங்களும் | 3,500 | 53,000 | 5,000 | 40,200 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **75,000** | | **76,200** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | | | |
| **உரிமையாண்மை :** | | | | |
| சாதாரண பங்கு மூலதனம் | | 50,000 | | 50,000 |
| கைக்கொள் இலாபம் | | 7,200 | | 6,000 |
| | | 57,200 | | 56,000 |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | | | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 17,700 | | 19,800 | |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 100 | 17,800 | 400 | 20,200 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | **75,000** | | **76,200** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) ஆண்டின்போது கம்பனி அதன் சாதாரண பங்குதாரர்களுக்கு இடைக்காலப் பங்கிலாபமாக ரூ.2,000,000/- இனைச் செலுத்தியது.

(2) 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி ரூ. 10 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட எந்திரம் ஒன்றினை 2018 மார்ச் 31 இல் கம்பனி ரூ. 4 மில்லியனுக்கு விற்பனை செய்தது. எந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாகும்.

(3) ஆண்டின்போது ஆதனம், பொறி மற்றும் உபகரணக் கொள்வனவுகள் எதுவும் இடம்பெறவில்லை.

(4) வரிமதிப்பாண்டு 2017/18 க்கு கம்பனியின் வருமான வரிச் செலவு ரூ. 450,000/- ஆக மதிப்பிடப் பட்டது.

மேலே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி,

**நீங்கள் செய்யவேண்டியது :**

**நேரில் முறையைப்** பயன்படுத்தி 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட செவன் றோசஸ் கம்பனியின்** காசுப் பாய்வுக் கூற்றினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 07

(a) 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக **வரையறுக்கப்பட்ட SRL கம்பனி** தொடர்பில் கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

2017 ஏப்ரல் 01 ஆந் திகதி கம்பனியானது பொறி மற்றும் எந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலத்தினை மீளாய்வு செய்தது. மீளாய்வின்படி பொறி மற்றும் எந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலத்தினை 2017 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 3 ஆண்டுகளிலிருந்து 8 ஆண்டுகளாக மாற்றஞ்செய்யத் தீர்மானிக்கப்பட்டது. பொறி மற்றும் எந்திரத்தின் கிரயமும் 2017 ஏப்ரல் 01 ஆந் திகதி அதன் திரள் தேய்மானமும் முறையே ரூ.8,000,000/- மற்றும் ரூ. 3,200,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

LKAS 8 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் எனும் நியமத்திற்கு அமைவாக, மேற்படி சந்தர்ப்பத்தில் 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்கீட்டு வழிமுறையை (accounting treatment) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுடன் தொடர்புபட்டவையாகும்.

(1) வாடிக்கையாளர் கொள்வனவு செய்து முதல் ஆறு மாத காலத்தினுள் தெரியவரும் எந்தவொரு உற்பத்திக் குறைபாடுகளினதும் திருத்தச் செலவை வாடிக்கையாளருக்கு ஈடுசெய்யும் வகையில் கம்பனி பொருட்களை உத்தரவாத அடிப்படையில் விற்பனை செய்கின்றது. கம்பனியின் கடந்த கால அனுபவத்தில் விற்பனையின் 2% க்கு உத்தரவாதத் திற்கான திருத்தச் செலவு செலுத்தப்பட வேண்டும். 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டில் ரூ. 30 மில்லியன் விற்பனை பதிவு செய்யப்பட்டது. விற்பனை ஆண்டு முழுவதும் சீராகப் பரம்பியுள்ளதாகக் கொள்க.

(2) வரிமதிப்பாண்டு 2015/16 இல் செலவுசெய்த செலவுகளின் அனுமதிக்கப்படாத செலவுகளுக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ரூ. 2.5 மில்லியனை வருமான வரி மதிப்பீடாக விதித் துள்ளது. செலவுகள் தொடர்பான பல பதிலிறுப்புகள் மற்றும் கடிதத் தொடர்பாடல்களின் பின்னர் 2018 மார்ச் 30 ஆந் திகதி வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு அந்த வரிமதிப்பீட்டினை ரூ. 2 மில்லியனாக முடிவு செய்தது. இது நிதிக் கூற்றுக்களில் கணக்கிற் கொள்ளப்படவில்லை.

(3) மோசடியில் ஈடுபட்டதன் காரணமாக 2018 மார்ச் 25 ஆந் திகதி ஊழியர் ஒருவர் கம்பனியால் வேலை நீக்கம் செய்யப்பட்டதன் காரணமாக அவ்வூழியர் கம்பனிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளார். 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட திகதி வரையில் கம்பனி நட்டஈடு செலுத்துவதற்கான சாத்தியம் இல்லையென கம்பனியின் வழக்கறிஞர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

மேலே தரப்பட்டுள்ள ஒவ்வொரு நிகழ்வையும் LKAS 37 – ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள் நியமத்திற்கு அமைய 2018 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் எவ்வாறு ஏற்பிசைவு செய்யமுடியுமென **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

2018 மார்ச் 31 ஆந் திகதியில் **கோல்டன் PLC** யின் பரீட்சை மீதி கீழ்வருமாறு :

**கோல்டன் PLC**

**2018 மார்ச் 31 இல் பரீட்சை மீதி** *(ரூ.'000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் - 5,000,000 பங்குகள் | | 50,000 |
| 2017 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம் | | 13,350 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (கிரயத்தில்): | | |
| காணியும் கட்டடமும் (காணிப் பெறுமதி ரூ.30 மில்லியன்) | 40,000 | |
| மோட்டார் வாகனங்கள் | 28,000 | |
| அலுவலக உபகரணம் | 8,000 | |
| திரள் தேய்மானம் - 2017 ஏப்ரல் 01 இல் : | | |
| கட்டடங்கள் | | 4,000 |
| மோட்டார் வாகனங்கள் | | 6,000 |
| அலுவலக உபகரணம் | | 1,500 |
| குறுங்கால முதலீடுகள் | 25,000 | |
| தொக்குகள் - 2018 மார்ச் 31 இல் (கிரயத்தில்) | 30,000 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 87,000 | 101,850 |
| ஐயுறவுக் கடன் ஏற்பாடு – 2017 ஏப்ரல் 01 இல் | | 1,150 |
| அட்டுறு செலவுகள் | | 800 |
| வரிமதிப்பாண்டு 2016/17 க்குச் செலுத்த வேண்டிய வருமான வரி | | 2,000 |
| 15% வங்கிக் கடன் | | 5,000 |
| வங்கி மீதி | 1,200 | |
| காசுக் கையிருப்பு | 600 | |
| விற்பனைக் கிரயம் / விற்பனை | 420,000 | 545,000 |
| பெறப்பட்ட முதலீட்டு வருமானம் | | 2,800 |
| சாதாரண பங்குதாரர்களுக்குச் செலுத்தப்பட்ட இடைக்கால பங்கிலாபம் | 5,000 | |
| நிருவாகச் செலவுகள் | 37,000 | |
| விநியோகச் செலவுகள் | 41,500 | |
| நிதிச் செலவுகள் | 1,350 | |
| செலுத்திய வருமான வரி | 8,800 | |
| | **733,450** | **733,450** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2013 ஏப்ரல் 01 ஆந் திகதி ஒவ்வொன்றும் ரூ. 60,000/- விலையில் கொள்வனவு செய்யப்பட்ட ஐந்து கணினிகளை கம்பனியானது 2017 டிசெம்பர் 31 இல் ஒவ்வொரு கணினியும் ரூ.10,000/- விலையில் விற்பனை செய்தது. கம்பனி இந்த ஊடுசெயல் தொடர்பில் பணத்தை இன்னும் பெறவில்லை. இந்தக் கணினிகளின் விற்பனை தொடர்பில் கணக்கேடுகளில் எந்தப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(2) கம்பனிக்குப் புதிய களஞ்சியமொன்றினை நிருமாணிப்பதற்காக கம்பனியானது 2017 ஏப்ரல் 01 இல் ஆண்டிற்கு 15 % வட்டி வீதத்தில் ரூ. 5 மில்லியன் வங்கிக் கடனைப் பெற்றது. களஞ்சிய நிருமாண வேலைகள் 2017 மே 01 ஆந் திகதி ஆரம்பித்து 2017 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்ததுடன் பயன்பாட்டிற்கும் கிடைக்கப்பெற்றது. வங்கிக் கடன் முற்றிலுமாக களஞ்சிய நிருமாணத்தில் பயன்படுத்தப்பட்டதுடன் ரூ. 5 மில்லியன் புதிய களஞ்சியத்தின் கிரயமாக கட்டடக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டது.

ஆண்டின்போது கம்பனியால் கடனுக்கான மீள்கொடுப்பனவுகள் செய்யப்படவில்லை என்பதுடன் 2018 மார்ச் 31 இல் இருந்த வங்கிக் கடனின் ¼ பங்கு அடுத்த ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்படவும் வேண்டும்.

(3) 2018 மார்ச் 31 ஆந் திகதி தொக்குகளின் நிகர தேறத்தக்க பெறுமதி ரூ. 32,000,000/- ஆகும்.

(4) கம்பனி, 2018 மார்ச் 01 ஆந் திகதி தனது காணியை மீள்மதிப்புச் செய்ததுடன், மீள்மதிப்பு காரணமாக காணியின் பெறுமதி ரூ. 1.5 மில்லியனால் அதிகரித்திருக்கிறது. இது கணக்கேடுகளில் பதிவுசெய்யப்படவில்லை.

(5) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீது தேய்மானம், கிரயத்தில் அல்லது மீள்மதிப்புப் பெறுமதியில் நேர்கோட்டு அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது. ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படிகளின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு

| | | |
|---|---|---|
| கட்டடங்கள் | : | 25 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | : | 05 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணம் | : | 10 ஆண்டுகள் |

(6) 2018 மார்ச் 31 ஆந் திகதி ரூ. 1,500,000/- பெறுமதியான வியாபார வருமதிகள் அறவிட முடியாதவையாகக் காணப்பட்டன. 2018 மார்ச் 31 இல் எஞ்சியுள்ள வியாபார வருமதி மீதிகளுக்கு 2% பொதுவான ஐயுறவுக் கடன் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

(7) 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முதலீட்டு வருமானம் ரூ. 4,000,000/-.

(8) வரிமதிப்பாண்டு 2017/18 க்கான கம்பனியின் வருமான வரிப் பரிப்பு ரூ. 9,000,000/- ஆக மதிப்பிடப் பட்டுள்ளது.

(9) 2018 மே 20 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் 2018 மார்ச் 31 ஆந் திகதியில் இருந்த சாதாரண பங்குகள் ஒவ்வொன்றிற்கும் 50 சதம் இறுதிப் பங்கிலாபமாகச் செலுத்துவதற்குப் பணிப்பாளர் சபை தீர்மானித்தது.

(10) நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக 2018 யூன் 10 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பிரசுரிப்புக்குப் பொருத்தமான வகையில் **கோல்டன் PLC** க்கு கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று) (10 புள்ளிகள்)

(b) 2018 மார்ச் 31 இல் நிதிநிலைக் கூற்று (07 புள்ளிகள்)

(c) 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று (03 புள்ளிகள்)

(d) 2018 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் ஆதனம், பொறி மற்றும் உபகரண மாற்றங்களைக் காட்டும் கூற்று (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) 2017 ஏப்ரல் 01 ஆந் திகதி **வரையறுக்கப்பட்ட மெகா டிரேடிங் கம்பனி (MT)** ஆனது **வரையறுக்கப்பட்ட ரனி ரோய்ஸ் கம்பனியின் (TT)** 80 % சாதாரண பங்கு மூலதனத்தை ரூ. 20 மில்லியனுக்குக் கொள்வனவு செய்தது. 2018 மார்ச் 31 ஆந் திகதியில் **MT** மற்றும் **TT** ஆகிய இரு கம்பனிகளினதும் நிதிநிலைக் கூற்றுக்கள் கீழ்வருமாறு :

**2018 மார்ச் 31 இல் நிதிநிலைக் கூற்று** *(ரூ.'000)*

| | MT | TT |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் | 60,000 | 15,000 |
| திரள் தேய்மானம் | (12,000) | (6,000) |
| முன்கொணரற் பெறுமதி | 48,000 | 9,000 |
| **TT** யில் முதலீடு | 20,000 | - |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | |
| தொக்குகள் | 15,100 | 18,000 |
| வியாபார வருமதிகள் | 40,250 | 10,500 |
| | 55,350 | 28,500 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **123,350** | **37,500** |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் - சாதாரண பங்குகள் | 78,000 | 20,000 |
| கைக்கொள் இலாபம் | 8,750 | 4,600 |
| | 86,750 | 24,600 |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள்:** | | |
| வங்கிக் கடன் | 10,600 | - |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார சென்மதிகள் | 15,100 | 10,500 |
| வங்கிக் கடன் | 4,800 | - |
| வங்கி மேலதிகப்பற்று | 6,100 | 2,400 |
| | 26,000 | 12,900 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **123,350** | **37,500** |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) சுவீகரிப்புத் திகதியில் **TT கம்பனியின்** கைக்கொள் இலாபம் ரூ. 1,200,000/- ஆகும்.

(2) சுவீகரிப்புத் திகதியில் கட்டுப்பாடற்றோர் நாட்டத்தின் சீர்மதிப்பு ரூ.5,000,000/- ஆகும். அத்துடன் சுவீகரிப்புத் திகதியில் **TT** யின் இனங்காணத்தகு நிகரச் சொத்துக்களின் சீர்மதிப்பு அவற்றின் ஏட்டுப் பெறுமதிக்குச் சமமாகும்.

(3) **MT கம்பனி** 2015 மார்ச் 31 இல் ரூ. 2.5 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்த விநியோக வான் ஒன்றினை 2017 ஏப்ரல் 01 ஆந் திகதி **TT கம்பனிக்கு** ரூ. 3 மில்லியனுக்கு விற்பனை செய்தது. இரு கம்பனிகளும் மோட்டார் வாகனங்களை நேர்கோட்டு அடிப்படையில் 5 ஆண்டுகள் ஈறாக கிரயத்தில் தேய்மானம் செய்கின்றன.

(4) ஆண்டின்போது **TT கம்பனி** கிரயத்தில் 20 % இலாபம் வைத்து பொருட்களை ரூ.600,000/- க்கு **MT கம்பனிக்கு** விற்றது. 2018 மார்ச் 31 இல் இந்தப் பொருட்களில் அரைப்பங்கு **MT கம்பனியின்** தொக்குகளில் இருந்தது.

(5) **TT கம்பனியின்** வியாபார வருமதிகள் ஆண்டின்போது மேற்கொள்ளப்பட்ட விற்பனை ஊடுசெயல்களுக்காக **MT கம்பனியிலிருந்து** வருமதியாகவுள்ள ரூ. 25,000/- இனை உள்ளடக்கி யிருந்தது.

மேற்படி தகவல்களைப் பயன்படுத்தி,

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) ஒன்றித்தல் மீதான நன்மதிப்பைக் **கணிக்குக.** (05 புள்ளிகள்)

(b) 2018 மார்ச் 31 இல் ஒன்றித்த நிதிநிலைக் கூற்றினைத் **தயாரிக்குக.** (14 புள்ளிகள்)

(B) கீழே தரப்பட்டுள்ள விகிதங்கள் 2018 மார்ச் 31 மற்றும் 2017 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான **வரையறுக்கப்பட்ட டைனமிக் என்டபிரைசஸ் கம்பனியின்** செயற்பாடுகள் தொடர்பில் கணிக்கப்பட்டன :

| | **ஆண்டு முடிவு 2018 மார்ச் 31** | **ஆண்டு முடிவு 2017 மார்ச் 31** |
|---|---|---|
| நெம்பு விகிதம் (Gearing Ratio) | 82 % | 65 % |
| தொழிற்படுத்திய மூலதனம் மீதான வருவாய் (ROCE) | 20 % | 35 % |
| சொத்துப் புரள்வு விகிதம் | 5 தடவை | 3 தடவை |

**நீங்கள் செய்யவேண்டியது :**

தரப்பட்டுள்ள இரு ஆண்டுகளுக்கிடையில் கணிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு விகிதங்களிலும் ஏற்பட்ட மாற்றங்களுக்கான சாத்தியமான காரணங்கள் இரண்டு (02) வீதம் **குறிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |